செ.வெ.எண்: 562 நாள்: 10/09/2020.

## பத்திரிக்கை செய்தி

பிராணிகள் வதை தடுப்பு ( செல்லப் பிராணிகள் கடை) விதி 2018 மற்றும் பிராணிகள் வதைதடுப்பு (நாய்கள் இனவிருத்தி மற்றும் விற்பனை) விதி 2017 ஆகியவற்றின் துணை விதிகள் 3 மற்றும் 4 இன்வழி மாநில பிராணிகள் நலசங்கத்தில் பதிவு பெற்ற பின்னரே செல்ல பிராணிகள்கடைகள் (Pet Shops) நடத்திடவும் மற்றும் நாய்கள் இனவிருத்தி (Dog Breeding ) செயல் நடத்துதல் ஆகியன மேற்கொள்ளப்படல் வேண்டும்.

எனவே, மேற்படி செல்லப்பிராணிகள் கடை மற்றும் நாய்கள் இன விருத்தி மற்றும் விற்பனை நிலையங்கள் வைத்திருப்பார்கள் பொது முடக்கத்திற்கு பின் தமிழ்நாடு மாநில பிராணிகள் சங்கத்தில் பதிவு பெற்ற பின்னரே கடைகள் திறந்து செயல்படுத்தல் வேண்டும் என தெரிவிக்கப்பட வேண்டுகிறது.

பதிவு செய்தல் தொடர்பான விவரங்கள் மற்றும் விண்ணப்பங்களை தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

03.9.2020

மண்டல இணை இயக்குநர்
கால்நடை பராமரிப்புத்துறை
தஞ்சாவூர்.

மாவட்ட ஆட்சியர்
தஞ்சாவூர்.

3/9/2020 3/9/2020